DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW9 |
| Name | : | இரவிக்குமார். மா |
| Father's Name | : | மா. மாது |
| Village | : | அன்னதானப்பட்டி |
| Taluk | : | அன்னதானப்பட்டி |
| District | : | சேலம் மாநகரம் |
| Profession | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 56 yrs |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 21st day of June 2025.
1,2 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.
முதல் விசாரணை :–

நான் தற்போது சேலம் மாநகரம் அன்னதானப்பட்டி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ஆம் வருடம் கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, பெங்களூரு, ஆனேக்கல் தாலுகா, கொல்லப்பள்ளி கிராமத்தை சேர்ந்த அனுமா ரெட்டி மகன் மதுராஜரெட்டி என்பவர் கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று அஞ்செட்டி காவல் நிலைய குற்ற எண்.17/2020, சட்டப்பிரிவுகள் 392, உ/இ 397 இதசவாக வழக்கு பதிவு செய்தேன். வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகளுடன் சம்பவ இடத்திற்கு 12.02.2020 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் கோபால், வேணுகோபால் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் நான் தயார் செய்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அவை முறையே **அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகின்றன. சாட்சிகள் மதுராஜரெட்டி, வேணுகோபால், கோபால், விநாயகா, ஜெகதீஷ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே

கிடைத்த தகவலின் படி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி கார்த்திகேயன் என்பவர் தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி பஞ்சாயத்து, தடாகம் அடுத்த கட்டஞ்சிபுரம் கிராமத்தில் இருப்பதாக கிடைத்த தகவலின் பெயரில் சாட்சிகள் மற்றும் காவலர்களுடன் எதிரியின் வீட்டின் அருகில் சென்று எதிரியை சாட்சிகள் அடையாளம் காட்ட 14.00 மணிக்கு கைதிற்கான காரணத்தை கூறி கைது செய்து, மேற்படி எதிரியை நிலையம் அழைத்து வந்து, வரவழைக்கப்பட்ட சாட்சிகள் அஞ்செட்டி கிராம நிர்வாக அலுவலர் ராமு, கிராம உதவியாளர் செல்வி ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சம்பவ இடத்திற்கு அருகில் சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட கத்தியை முட்புதரின் அருகில் இருந்து எடுத்து ஆஜர் படுத்தியதை அதே சாட்சிகள் முன்னிலையில் 17.45 மணிக்கு மகசரில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட கத்தி **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட இரு சக்கர வாகனம் TN 24 X 2116 – TVS victor சிவப்பு நிற வாகனத்தை வழக்கின் ஒன்றாம் எதிரி பாரதி மோகன் என்பவர் தேன்கனிக்கோட்டை காவல் நிலையத்தின் பின்புறம் நிறுத்தி வைத்திருந்ததை எதிரி கார்த்திகேயன் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்தததில் 18.15 மணிக்கு மகசரில் கைப்பற்றினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர் நான் தயார் செய்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒன்றாம் எதிரி பாரதி மோகனை அவர் பணிசெய்யும் இடத்திற்கு காவலர்களுடன் சென்று விசாரித்த போது, ஆய்வாளர் லட்சுமண தாஸ் அவர் ஓட்டுநராக தனக்கு பணிபுரிந்ததாகவும், சம்பவத்திற்கு பிறகு அலுவலகத்திற்கு வரவில்லை என்றும், கூறியதன் பெயரில் அவரிடம் விசாரித்து மாதிரி அலுவல் பணிப்புத்தகம் நகலை பெற்று மேற்படி எதிரியை கண்டுபிடிக்க தக்க புலன் வைத்தும், எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து, படிவம் 91 மூலம் எதிரியையும், வழக்கு சொத்தையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதன் பிறகு பணியிட மாறுதல் பெற்று, சென்றதால் வழக்கு கோப்பினை காவல் உதவி ஆய்வாளர் அருணகிரி வசம் ஒப்புவித்து மேலும் இவ்வழக்கின் சாட்சிகள் மதுராஜரெட்டி, வேணுகோபால், ஜெகதீஷ் ஆகியோரை மீண்டும் விசாரித்து கூடுதல் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

<u>1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

1 ஆம் எதிரி காவல் துறையில் காவலராக பணிபுரிகிறார்

என்றால் சரிதான். அவர் காவல் ஆய்வாளருக்கு கீழ் பணிபுரியும் இடத்தில் தான் பணிபுரிகிறார் என்றால் சரிதான். குற்றம் நடந்ததாக சொல்லப்படும் நாள் 28.01.2020 ஆம் தேதி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நாள் 12.02.2020 என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த புகாரிலேயே ரூ.10,000/– த்தை எதிரிகள் வழிமறித்து பறித்துக் கொண்டார்கள் என்பது தான் என்றால் சரிதான். நீங்கள் எதிரிகளை கைது செய்யும் போது அவர்களிடம் இருந்து மேற்படி தொகையை கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள் மிரட்டி பணம் பறித்த போது அவர்களுடைய இரு சக்கர வாகனத்தை புகார்தாரர் படம் பிடித்ததாக புகாரிலேயே குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த புகைப்படத்தின் நகலை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் உங்களுடைய கையிருப்பு சாட்சிகளை வைத்து நடக்காத ஒரு சம்பவத்தை குறித்து காவல் நிலையத்திற்கே சாட்சிகளை வரவழைத்து கையொப்பம் பெற்று, பொய்யான ஒரு முதல் தகவல் அறிக்கையை தயார் செய்திருக்கிறீர்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கூட மூன்றாம் நபர் சாட்சிகளிடம் கையெழுத்து பெறாமல் உங்களுடைய கையிருப்பு சாட்சிகளான கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளரிடம் கையொப்பம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் நீதிமன்றத்தில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு கீழ்படிந்த நிலையில் பணிபுரியும் 1 ஆம் எதிரியின் மீது அவர் கீழ் படியவில்லை என்பதற்காக பொய்யான இந்த வழக்கை பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அவர் மீது இருந்த ஒரு வன்மத்தின் காரணமாக அவரது உறவினராக 2 ஆம் எதிரியின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் சா.பொ.1 கத்தி உங்களால் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருள் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஓம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.